பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

19.08.2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா வந்துள்ள சீன வெளியுறவு அமைச்சர் திரு. Wang Yi பிரதமர் திரு. நரேந்திர மோடியை புதுதில்லியில் இன்று சந்தித்துப் பேச உள்ளார்.

2. தீவிரவாதத்தை அனைத்து வடிவிலும் எதிர்ப்பதே இந்தியாவின் முன்னுரிமை என்று வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. ஜம்மு-கஷ்மீரில் மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 62ஆக அதிகரித்துள்ளது.

4. ரஷ்யா - யுக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர இருநாட்டு அதிபர்களும் சந்தித்துப் பேச வேண்டியது அவசியம் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

5. 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சுமித் மாலிக் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா வந்துள்ள சீன வெளியுறவு அமைச்சர் திரு. Wang Yi பிரதமர் திரு. நரேந்திர மோடியை புதுதில்லியில் இன்று சந்தித்துப் பேச உள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காக, இம்மாதம் 31 மற்றும் செப்டம்பர் ஒன்றாம் தேதிகளில் பிரதமர் அந்நாட்டிற்கு செல்லவிருக்கும் நிலையில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

திரு. நரேந்திர மோடி தமது சீன பயணத்தின்போது அந்நாட்டு அதிபர் திரு. Xi Jinping, ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் ஆகியோரை சந்தித்துப் பேச திட்டமிட்டுள்ளார்.

இதனிடையே சீன வெளியுறவு அமைச்சர், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை நேற்று சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.

இந்த பேச்சுக்களின் போது, இருதரப்பிலும் வெளிப்படையான மற்றும் ஆக்கபூர்வமான அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

உலகளாவிய பொருளாதரத்தில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தவும், அதனைப் பராமரிக்கவும் உகந்த சூழல் தற்போது உருவாகி இருப்பதாக திரு. ஜெய்சங்கர் கூறினார்.

தீவிரவாதத்தை அனைத்து வடிவிலும் எதிர்ப்பதே இந்தியாவின் முன்னுரிமை என்று அவர் குறிப்பிட்டார்.

ஆறுகள் குறித்த தகவல் பகிர்வு எல்லைப் பகுதியில் வர்த்தகம், பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து சீன வெளியுறவு அமைச்சருடன் திரு. ஜெய்சங்கர் விரிவாக ஆலோசித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தேசிய ஜனநாயக கூட்டணி குடியரசு துணைத்தலைவர் வேட்பாளர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தமது வேட்புமனுவை நாளை தாக்கல் செய்ய உள்ளார்.

புதுதில்லியில் நேற்று தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளின் நாடாளுமன்ற குழுத் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் மனுதாக்கலின்போது கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்பார்கள் என்று தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக கூட்டணின் நாடாளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறும் என்றும், அதில் கூட்டணி சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் முறைப்படி அறிமுகம் செய்து வைக்கப்படுவார் என்றும் திரு. கிரண் ரிஜிஜு கூறினார்.

குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு அனைத்து கட்சிகளும் ஆதரவளிக்கும் என்றும் திரு. கிரன் ரிஜிஜு நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் மழை வெள்ளத்தால் மோசமான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள கிஷ்துவார் மாவட்டத்தில் 5வது நாளாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வாரத்தில் அங்கு ஏற்பட்ட கனமழை, பெருவெள்ளத்தில் மாயமானவர்களை தேடும் நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனிடையே இந்த மழை வெள்ளத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 62ஆக அதிகரித்திருப்பதாகவும், 42 பேர் காணாமல் போயுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மீட்புக் குழுவினர் தொடர்ந்து பணியில் ஈடுபட்டுள்ளதால் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்றும் அவர் மேலும் கூறினார்.

<<<<>>>>

ரஷ்யா - யுக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர இருநாட்டு அதிபர்களும் சந்தித்துப் பேச வேண்டியது அவசியம் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் திரு. ஜெலன்ஸ்கியை திரு. ட்ரம்ப் நேற்று சந்தித்துப் பேசினார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றனர்.

யுக்ரைனுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிப்பதன் முக்கியத்துவம் குறித்து ஆலோசனை நடத்தியதாகவும், போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உதவ வேண்டும் என்றும் அப்போது திரு. ட்ரம்ப் வலியுறுத்தினார்.

யுக்ரைனுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் ஒப்புக்கொண்டிருப்பதையும் அப்போது திரு. ட்ரம்ப் எடுத்துரைத்தார்.

ரஷ்ய அதிபருடன் நடத்திய பேச்சுகளைத் தொடர்ந்து அடுத்தகட்டமாக முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் திரு. ஜெலன்ஸ்கியிடம் அமெரிக்க அதிபர் தெரிவித்தார்.

நீண்டகால அடிப்படையில் அமைதியை ஏற்படுத்த அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டியது அவசியம் என்றும் திரு. ட்ரம்ப் அப்போது வலியுறுத்தினார்.

<<<<>>>>

சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் சென்று வெற்றிகரமாக திரும்பிய திரு. சுபான்ஷு சுக்லா, பிரதமர் திரு. நரேந்திர மோடியை நேற்று சந்தித்துப் பேசினார்.

விண்வெளியில் இருந்து திரும்பிய பின்னர் இந்தியா வந்த அவர், புதுதில்லியில் நேற்று பிரதமரை சந்தித்தார்.

இந்த சந்திப்பு குறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், திரு. சுபான்ஷு சுக்லாவுடனான உரையாடலின்போது அவரது விண்வெளி அனுபங்கள், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் குறித்து விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் லட்சிய திட்டமான ககன்யான் திட்டம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து அவருடன் உரையாடியதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

திரு. சுபான்ஷு சுக்லாவின் சாதனையால் இந்தியா பெருமையடைவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

Meerut - Karnal இடையே Bhuni சுங்கச்சாவடியில் ராணுவத்தினரிடம் கட்டணம் வசூலிப்பதில் தவறாக நடந்துகொண்ட நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளது.

கட்டணம் வசூலிக்கும் நிறுவனத்திற்கு 20 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருப்பதாக நெடுஞ்சாலை ஆணையம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

சுங்கச்சாவடி ஊழியரின் நடத்தையை உறுதி செய்ய தவறியதுடன், ஒப்பந்தத்தை மீறி செயல்பட்டதாக அந்த நிறுவனத்திற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் 6 நக்சலைட்டுகள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

நக்சலைட்டுகளுக்கு எதிரான காவல்துறையினரின் நடவடிக்கையில் மேலும் ஒரு முன்னேற்றமாக இந்த கைது அமைந்துள்ளது.

Latehar, Khunti மாவட்டங்களில் 6 நக்சலைட்டுகளை காவல்துறையினர் கைது செய்திருப்பதாக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர்களிடமிருந்து ஆயுதங்கள் மற்றும் துப்பாக்கி குண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

<<<<>>>>

காஸா உடனான புதிய சண்டைநிறுத்த திட்டத்தை ஏற்றுக்கொண்டிருப்பதாக ஹமாஸ் அறிவித்துள்ளது.

காஸா நகரில் இஸ்ரேலிய படையினர் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த நிலையில் அதனை தடுத்து நிறுத்தி புதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்த கத்தார் மற்றும் எகிப்து நாடுகள் மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில் ஹமாஸ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், புதிய சண்டைநிறுத்த திட்டத்தை தாங்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், பாலஸ்தீனத்தில் ஏற்பட்டு வரும் அழிவுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இருதரப்புக்கும் இடையேயான மோதல் விரைவில் முடிவுக்கு வரும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கர்நாடகா, குஜராத், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, கோவா ஆகிய மாநிலங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சத்தீஸ்கட், கேரளா, தெலங்கானா மாநிலங்களிலும், மாஹே, விதர்பா பகுதிகளிலும் அதிகனமழைக்கான வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே வடகிழக்கு மாநிலங்கள், ஆந்திரா, ராஜஸ்தானின் கிழக்குப் பகுதி, ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு-கஷ்மீர், லடாக் ஆகிய பகுதிகளிலும் கனமழைக்கான வாய்ப்பு உள்ளதாக அந்த மையம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வங்கக் கடலில் தெற்கு ஒடிசா மற்றும் வடக்கு ஆந்திரப்பிரதேசத்திற்கு இடையே உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி நேற்றிரவு வலுவடைந்து காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாறியுள்ளது.

இது ஒடிசாவின் கோபால்பூர் கடற்கரை பகுதியில் இன்று கரையைக் கடக்கும் என்று வானிலை மைய தகவல் தெரிவிக்கிறது.

<<<<>>>>

20 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சுமித் மாலிக் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

பல்கேரியாவின் Samakov-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் மால்டோவாவின் Ion Bulgaru-ஐ வென்றார்.

---

-------------

ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா மேலும் ஒரு தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றது.

கஜகஸ்தானின் Shymkent-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் ஜூனியர் பிரிவில் கிரீஷ் குப்தா தங்கப் பதக்கத்தையும், தேவ்பிரதாப் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

---

சர்வதேச பாரா டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் தரவரிசைப் பட்டியலில் முதலிடம் பிடித்த இந்தியாவின் Bhavina Patel-க்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

---

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபன்னா – மொனாக்கோவின் Arneodo இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-1, 6-1 என்ற செட் கணக்கில் இத்தாலியின் Luciano – பிரான்சின் Alexandre Muller இணையை வென்றது.

துரந்த் கோப்பை கால்பந்துப் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் Lajong அணி இன்று ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

---

சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் போட்டியில் ஸ்பெயினின் Carlos Alcaraz பட்டம் வென்றார்.

<<<<The End>>>>